Regiesered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 24 (10 12 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 295

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் சம்பளங்களில் முரண்பாடு

மத்திய கல்வி அமைச்சினால் 1989 இல் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கும், 1990இல் வட-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கும் இடையில் சம்பளத்தில் முரண்பாடு காணப்படுகின்றது. மத்திய கல்வி அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் 1750 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. இத்துடன் நவம்பர் 300 ரூபா அலவன்சும் சேர்த்து வழங்கப்படுகிறது. இதுவரை வேறு எவ்வித சம்பள உயர்ச்சியும் வழங்கப்படவில்லை. வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் (4-ம் பக். பார்க்க)

புலிகள் அதிரடி: 7 இராணுவம் பலி

திருக்கோணமலையில் சம்பவம்

(நமது நிருபர்)

திருமலை குச்சவெளி இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவ அணியின் மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப் பட்டன. இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் குச்சவெளி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து சலப்பையாறுக்கு ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின் மீதே விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். மேற்படி தாக்குதல் இராணுவ முகாமிலிருந்து இருநூற்றைம்பது யார் தொலைவில் நடைபெற்றதுகுறிப்பிடத்தக்கது.

சில நிமிடங்கள் வரை நடைபெற்ற இவ்வதிரடித் தாக்குதலின்போது ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலின் போது படுகாயமடைந்த இராணுவத்தினரையும் தூக்கிக்கொண்டு ஏனையோர் முகாமிற்குள் தப்பியோடினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவிதசேதமும் ஏற்படவில்லை.

இந்த அதிரடித்தாக்குதலின் போது இராணுவத்தினரிடம் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்படை மீது தாக்கு; இருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாலவற்குளத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் இரு ஊர்காவற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இவர்களது ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

நேற்று மாலை 3-00 மணியளவில் பாலவற்குளம் 8 ஆம் பிரிவிலிருந்து புளியங்குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடாத்தியதில் இரு ஊர்காவற்படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

இவர்களிடம் இருந்து 303 ரகத் துப்பாக்கி -1, இதற்குரிய மகசின் -1, 303 ரவைகள் -9 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகளின் ஆயுதக் கப்பல்; சிறிலங்கா பொலிஸ் பார்க்கது

மோதல் நேற்று தணிவு

(நமது நிருபர்)

இரண்டுதினங்களாகப் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நடைபெற்ற மோதல்கள் நேற்றையதினம் தணிந்து காணப்பட்டது.

அதேவேளை பலாலிப் பகுதியில் விமானப்படை விமானங்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. பல தடவைகள் விமானங்கள் பலாலிப் பகுதியில் தரை இறங்கிச் சென்றன. (ஈ)

கடவுச் சீட்டுகள் விசாக்கள் சிக்கின

(கொழும்பு)

சிங்கப்பூர் கடவுச் சீட்டுக்கள் மற்றும் இங்கிலாந்து, ஜேர்மன் விசாக்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டன. இவை இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25 சிங்கப்பூர் கடவுச்சீட்டுக்கள், 19 ஜேர்மன், 19 இங்கிலாந்து விசாக்கள் புகைப்பட ஆல்பம் ஒன்றினுள் வைத்து இருவரால் கொண்டு வரப்பட்ட போது விமான நிலையத்தில் சுங்கப் பகுதியினரிடம் பரிசோதனையின் போது சிக்கிக் கொண்டது.

இது தொடர்பாக இந்தியா சென்றுதிரும்பிய ஓர் ஆணும் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்களத் தொழிலாளர் வேலை செய்ய மறுப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாற்பது சிங்களக் குழுத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் அங்கு வேலை செய்ய மறுத்துள்ளதாக தெரிய வருகிறது.

பரீட்சை நிலையம் மீது விமான குண்டுவீச்சு

அதிபர் காயம்; மாணவர் ஓட்டம்

(பண்டிவிரிச்சான்)

மன்னார் மாவட்டம் பண்டிவிரிச்சான் பரீட்சை நிலையம் மீது நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படைவிமானங்கள்திடீர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின, இதில் ஒரு பாடசாலை அதிபர் காயமடைந்தார். மாணவர்கள் சிதறி ஓடினர். பாடசாலைக் கட்டடங்கள், உபகரணங்கள் பலத்த சேதமடைந்தன.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகிய அரை மணி நேரத்தில் பண்டிவிரிச்சான் பகுதியை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் பண்டிவிரிச்சான் பாடசாலை மீது அடுத்தடுத்து ஐந்து குண்டுகளை வீசின. இத்தாக்குதலைத் தொடர்ந்து மாணவர் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இத்தாக்குதலின் போது உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய மன்னார் தட்சணாமருதமடு அரசினர் பாடசாலை அதிபரான திரு. பஸ்தியாம்பிள்ளை படுகாயமடைந்தார். இத்தாக்குதலின் போது பரீட்சை வினாத்தாள்கள், அடையாள அட்டைகள், அனுமதி அட்டைகள், பாடசாலை உபகரணங்கள், மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் உட்பட பாடசாலைக் கட்டடங்களும் பலத்த சேதமடைந்தன. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பிரதேசக் கல்விப் பணிப்பா

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் தாக்குதல்கள் இராணுவம் புதிய திட்டம்

- டென்சில் கொப்பேகடுவ

(கொழும்பு)

வடக்கில் மீண்டும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம் என்று வட பகுதிக்கான சிறிலங்காவின் தளபதி டென்சில் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத்தெரிவித்தகொப்பேகடுவ வட பகுதியில் தாக்குதல் நடத்துவதற்கென நாம் சில பகுதிகளை தேர்ந்தெடுத்துள்ளோம் என்றும் அங்கு கூடிய விரைவில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன் எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விஸ்தரிக்கும் நோக்கத்துடனேயே இந்த விஸ்தரிப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொண்டமானின் முயற்சியை

திருக்கோணமலையில் சம்பவம்

(நமது நிருபர்)

திருமலை குச்சவெளி இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற இராணுவ அணியின் மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் குச்சவெளி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து சலப்பையாற்றுக்கு ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். அதிரடித் தாக்குதல் இராணுவ முகாமிலிருந்து இருநூற்றைம்பது யார் தொலைவில் நடைபெற்றதுகுறிப்பிடத் தக்கது.

சில நிமிடங்கள் வரை நடைபெற்ற இவ்வதிரடித் தாக்குதலின்போது ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இத்தாக்குதலின் போது படுகாயமடைந்த இராணுவத்தினரையும் தூக்கிக்கொண்டு ஏனையோர் முகாமிற்குள் தப்பியோடினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவிதசேதமும் ஏற்படவில்லை.

இந்த அதிரடித்தாக்குதலின் போது இராணுவத்தினரிடமிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்படை மீது தாக்கு; இருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாவற்குளத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் இரு ஊர்காவற்படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இவர்களது ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

நேற்று மாலை 3-00 மணியளவில் பாவற்குளம் 8 ஆம் பிரிவிலிருந்து புளியங்குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை நடாத்தியதில் இரு ஊர்காவற் படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

இவர்களிடம் இருந்த 303 ரகத் துப்பாக்கி -1, இதற்குரிய மகசின் -1, 303 ரவைகள் -9 ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகளின் ஆயுதக் கப்பல்; சிறிலங்கா பொலிஸ் பார்த்தது

(கொழும்பு)

இந்தியக் கடற்படையினரால் கடந்த மாதம் கைப்பற்றப்பட்ட "தொங்கோவா" என்ற புலிகளின் ஆயுதக் கப்பலை சிறிலங்காப் பொலிஸ் குழு பார்வையிட்டது என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தமிழகப் பொலிசாருடன் புலனாய்வுச் செய்திகளை பரிமாறிக் கொள்வதற்காக சென்னை சென்றிருந்தனர் என்றும், அந்த நேரத்திலேயே இக்கப்பலை பார்வையிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவிலிருந்து சென்ற குழுவிற்கு உதவி பொலிஸ் சுப்பிரீண்டன் எம். எம். தயாரத்தின தலைமை தாங்கினார். இவருடன் இன்ஸ்பெக்டர் ஒருவரும், சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் சென்றனர்.

இவர்கள் சென்னையில் புலிகள் பற்றி விசாரணை நடாத்தும் 'கியூ' பிரிவு பொலிசாருடனும், அதிகாரிகளுடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தினர்.

அத்துடன் இவர்கள் இக்கப்பலின் தலைவர் பாலனையும் பொறியியலாளர் விவேகானந்தனையும் விசாரணை

(4ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில் மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் இளங்கோ (கல்விபுரம் கணநாதன்) வீரவேங்கை இன்பராஜ் (தங்கராசா ஜெயசீலன் மண்டான்) ஆகிய இரு வீரவேங்கைகளது புகழுடல்கள் நேற்று வடமராட்சிப் பகுதிகளிலும், வலி. கிழக்குப்பகுதிகளிலும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

வடமராட்சியில் நெல்லியடி பஸ்நிலையத்திற்கு முன்பாகவும், வலிகிழக்கில் அச்சுவேலி சந்தி, ஆவரங்கால் சந்தி ஆகிய பகுதிகளிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட போது பெருந்தொகையான

(4 ஆம் பக்கம் பார்க்க)

மிகுதி வினாத்தாள்கள் சனிக்கிழமை வரும்?

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கான மிகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று] ஆரம்பமாகிய நேத்படி பரீட்சைகள் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் குழப்பமின்றி ஒழுங்காக நடைபெற்றன.

எதிர்வரும் சனிக்கிழமை வரையிலான பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்கள் வவுனி

(4ஆம் பக்கம் பார்க்க)

தடவைகள் விமானம் பலாலிப் பகுதியில் தரை இறங்கிச் சென்றன. (ச)

கடவுச் சீட்டுகள் விசாக்கள் சிக்கின

(கொழும்பு)

சிங்கப்பூர் கடவுச் சீட்டுகள் மற்றும் இங்கிலாந்து, ஜேர்மன் விசாக்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டன. இவை இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25 சிங்கப்பூர் கடவுச்சீட்டுகள், 19 ஜேர்மன், 19 இங்கிலாந்து விசாக்கள் புகைப்பட ஆல்பம் ஒன்றினுள் வைத்து இருவரால் கொண்டு வரப்பட்ட போது விமான நிலையத்தில் சுங்கப் பகுதியினரிடம் பரிசோதனையின் போது சிக்கிக் கொண்டது.

இது தொடர்பாக இந்தியா சென்றுதிரும்பிய ஓர் ஆணும் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிங்களத் தொழிலாளர் வேலை செய்ய மறுப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நாற்பது சிங்கள வகுப்புத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் அங்கு வேலை செய்ய மறுத்துள்ளனராக தெரிய வருகிறது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு பொருட்களை இறக்குவதற்கென நாற்பது சிங்கள வகுப்புத் தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டனர்.

இத்தொழிலாளர்கள் தம்மால் தொடர்ந்து அங்கு தங்கி வேலை செய்ய முடியாது எனவும் உடனடியாகத் தம்மை சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்குமாறும் இராணுவ அதிகாரியிடம் முறையிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ச)

நேபாளத்தில் ஒருவர் கைது

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மேலும் ஒரு விடுதலைப்புலி முக்கியஸ்தர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளாரென சி.பி.ஐ. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தியாகராஜன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அதிபர் காயம்; மாணவர் ஓட்டம்

(பண்டிவிரிச்சான்)

மன்னார் மாவட்டம் பண்டிவிரிச்சான் பரீட்சை நிலையம் மீது நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படைவிமானங்கள்திடீர் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின, இதில் ஒரு பாடசாலை அதிபர் காயமடைந்தார். மாணவர்கள் சிதறி ஓடினர். பாடசாலைக் கட்டடங்கள், உபகரணங்கள் பலத்த சேதமடைந்தன.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகிய அரை மணி நேரத்தில் பண்டிவிரிச்சான் பகுதியை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் பண்டிவிரிச்சான் பாடசாலை மீது அடுத்தடுத்து ஐந்து குண்டுகளை வீசின. இத்தாக்குதலைத் தொடர்ந்து மாணவர் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இத் தாக்குதலின் போது உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய மன்னார் தட்சணாமருதமடு அரசினர் பாடசாலை அதிபரான திரு. பஸ்தியாம்பிள்ளை படுகாயமடைந்தார். இத்தாக்குதலின் போது பரீட்சை வினாத்தாள்கள், அடையாள அட்டைகள், அனுமதி அட்டைகள், பாடசாலை உபகரணங்கள், மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் உட்பட பாடசாலைக் கட்டடங்களும் பலத்த சேதமடைந்தன. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பிரதேசக் கல்விப் பணிப்பா

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் தாக்குதல்கள் இராணுவம் புதிய திட்டம்

- டென்சில் கொப்பேகடுவ

(கொழும்பு)

வடக்கில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம் என்று வட பகுதிக்கான சிறிலங்காவின் தளபதி டென்சில் கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத்தெரிவித்தகொப்பேகடுவ வட பகுதியில்தாக்குதல் நடத்துவதற்கென நாம் சில பகுதிகளை தேர்ந்தெடுத்துள்ளோம் என்றும் அங்கு கூடிய விரைவில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

அத்துடன் எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விஸ்தரிக்கும் நோக்கத்துடனேயே இந்த விஸ்தரிப்பு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

தொண்டமானின் முயற்சியை மனப்பூர்வமாக பரிசீலிக்க வேண்டும்

- ஹரல்ட் ஹேரத்

(கொழும்பு)

புலிகளிடமிருந்து அமைச்சர் எஸ். தொண்டமானுக்குச் செய்தி கிடைத்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்தியின் உள்ளடக்கம் பற்றி அமைச்சர் எஸ். தொண்டமான் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு மாத்திரமல்ல, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பல எதிர்க்கட்சி அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் விளக்கியுள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வைக் காணும் முகமாக அமைச்சர் தொண்டமான் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் வர

தொண்டா ஆவல்

யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருவதற்கும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் அமைச்சர் தொண்டமான் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாக நேற்றுக் கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான விடுதலைப்புலிகளின் கடிதமொன்றை அமைச்சர் தொண்டமானிடம் நேரடியாகச் சமர்ப்பிப்பதற்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்நாட்டு மீட்புப்படை புலிகள் அக்கறை

(சென்னை)

தமிழ்நாட்டில் தமது போராளிகளின் செயற்பாட்டை எளிதாக்குவதற்கும் தமக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வசதியாக விடுதலைப் புலிகள் தமிழ்நாடு மீட்புப்படை ஒன்றை செயற்படவைப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். இவ்வாறு அண்மையில் தமிழ்நாட்டில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சிறிகாந் என்பவர் தெரிவித்ததாக தமிழ்நாடு காவல்துறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

விஞ்ஞான பீடம்

எல்லா வருடங்களையும் சேர்ந்த விஞ்ஞான பீட மாணவர்களுக்கான வகுப்புக்கள் டிசம்பர் 2-ம் திகதி ஆரம்பமாகிவிட்டன. இதுவரை வகுப்புக்கு சமுகமளிக்காத மாணவர்கள் உடனடியாக வந்து சேரும்படி கேட்கப்படுகிறார்கள்.

பல்கலைக்கழக விதிகளின்படி, ஆரம்பித்த நாளிலிருந்து (அதாவது 2. 12.91 இல் இருந்து) 4 கிழமைகளுக்குப் பின்னர் வரும் மாணவர்கள் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

-பதிவாளர்

(B/3610)

வரி விளம்பரம்

'அடுப்பில்லாச் சமையல் நூல்'

'அடுப்பில்லாச்சமையல்செய்முறைக்குறிப்பு' என்ற நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ள ரூபா 2/ பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பி வைக்கவும். மிக்கவத், த. பெ. இல. 77, யாழ்ப்பாணம். (B/3596)

'சார்க்' மாநாட்டிற்கு தலைவர்கள் வருவதாக உறுதி

(கொழும்பு)

கொழும்பில் இம் மாதம் 21-ஆம் திகதி நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் ஏழு அங்கத்துவ நாடுகளினதும் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

பங்களாதேஷ், இந்தியா, பூட்டான், பாகிஸ்தான், நேப்பாளம், மாலைதீவு ஆகிய ஆறு நாடுகளிலிருந்து தலைவர்கள் கொழும்பு மாநாட்டில் தாம் கலந்து கொள்ள இருப்பதை ஊர்ஜிதம் செய்துள்ளார்கள்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இந்த சார்க் மாநாட்டின் தலைமைப் பதவியை மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூமிடமிருந்து பெற்றுக்கொள்வார்.

ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

உங்கள் குழந்தைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்



92ஆம் ஆண்டிற்கான
புதியபிரிவு

ஆண்டு 5

(புலமைப் பரிசில்
பரீட்சைக்குரிய வகுப்பு)

- யாழ். நகரில் அதிக எண்ணிக்கையான மாணவர்களை புலமைப் பரிசிற்குரியவர்களாக்கிய ஆசிரியர் குழு.
- வாரந்தோறும் மாதிரிப் பரீட்சை
- ஒவ்வொரு பிரிவிலும் குறைந்த எண்ணிக்கையிலான குறிப்பிட்ட மாணவர்கள்
- 10-12-91 பிற்பகல் 5-00 மணிக்கு முன்னதாக எமது நிறுவனத்தின் ஆரம்ப பிரிவில் (UNIVERSAL PRIMARY) பெயர்களை பதிவு செய்யவும்.

அனுமதிப் பரீட்சை: 14 - 12 - 91 (பி.ப. 3-00 மணி)

யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/3597)

விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி நடாத்தும்

இலக்கியப் போட்டி

1992 - 03 - 08இல் கொண்டாடப்படவிருக்கும் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி இலக்கியப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. எழுத்தார்வம் மிக்க அனைத்துப் பெண்களும் வயது வேறுபாடின்றி இந்தப் போட்டியில் பங்குபற்ற முன்வர வேண்டும் என்று விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கேட்டுக் கொள்கின்றது. இப் போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

1 கவிதை
2. சிறுகதை

இந்தப் போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் பெண் விடுதலையை முன்னெடுக்கும் நோக்கில் அமைய வேண்டும். காலங்காலமாக பெண்ணினத்தின் மீது திணிக்கப்படும் சமூக அடக்குமுறை வடிவங்களை மட்டுமல்லாது, ஆக்கிரமிப்பு அரசின் ஒடுக்குமுறைகளாலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழப் பெண்களின் அவல நிலைகளையும், உணர்வுகளையும் வெளிக்காட்டும் விதத்தில் படைப்புகள் படைக்கப்பட வேண்டும்.

எமக்கு அனுப்பப்படும் படைப்புகள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ, அல்

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(NEW COLLEGE OF HIGH STUDIES)

G. C. E. O/L
ஆண்டு 9, 10

(வகுப்புக்கள்: ஆரம்பம் 11-12-1991) 9 மணி

விஞ்ஞானம் - இரா. செல்வவடிவேல்
கணிதம் - கதிர்
வர்த்தகம் - இந்திரன்
தமிழ் - ரவி
சமூகக்கல்வி - ராஜன்
ஆங்கிலம் - கிரி

(B/3609)

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

நினைவு கூருகின்றோம்...

1991 - 12 - 10

லெப். கேணல் மதி

களுக்குப் பின்னர் வரும் மாணவர்களின் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப் பட மாட்டார்கள்.

-பதிவாளர்

(B/3610)

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

புலமைப் பரிசிற்குரியவர்களாக்கிய ஆசிரியர் குழு.

- வாரந்தோறும் மாதிரிப் பரீட்சை
- ஒவ்வொரு பிரிவிலும் குறைந்த எண்ணிக்கையிலான குறிப்பிட்ட மாணவர்கள்
- 10 - 12 - 91 பிற்பகல் 5-00 மணிக்கு முன்னதாக எமது நிறுவனத்தின் ஆரம்ப பிரிவில் (UNIVERSAL PRIMARY) பெயர்களை பதிவு செய்யவும்.

அனுமதிப் பரீட்சை: 14 - 12 - 91 (பி.ப. 3-00மணி)

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/3597)

விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி நடாத்தும்

இலக்கியப் போட்டி

1992 - 03 - 08இல் கொண்டாடப்படவிருக்கும் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி இலக்கியப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது. எழுத்தார்வம் மிக்க அனைத்துப் பெண்களும் வயது வேறுபாடின்றி இந்தப் போட்டியில் பங்குபற்ற முன்வர வேண்டும் என்று விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி கேட்டுக் கொள்கின்றது. இப் போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

1 கவிதை
2. சிறுகதை

இந்தப் போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் பெண் விடுதலையை முன்னெடுக்கும் நோக்கில் அமைய வேண்டும். காலங்காலமாக பெண்ணினத்தின் மீது திணிக்கப்படும் சமூக அடக்குமுறை வடிவங்களை மட்டுமல்லாது, ஆக்கிரமிப்பு அரசின் ஒடுக்குமுறைகளாலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தமிழீழப் பெண்களின் அவல நிலைகளையும், உள்ளக்கிடக்கைகளையும் வெளிக்காட்டும் விதத்தில் படைப்புகள் படைக்கப்பட வேண்டும்.

எமக்கு அனுப்பப்படும் படைப்புகள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ, தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் 3 பிரதிகள் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'அனைத்துலக மகளிர் நாள் இலக்கியப் போட்டி' எனக் குறிப்பிட வேண்டும். மேற்கூறப்பட்ட ஒவ்வொரு விடயத்திலும் தரமான முதல் 3 படைப்புகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். பிரசுரிக்கத் தகுதியானவை விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வெளியீடான 'சுதந்திரப் பறவைகள்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

படைப்புகளை அனுப்பும்போது அனுப்புபவர் தனது பெயர், வயது, முகவரி என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி, படைப்புகளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது படைப்புகளை 1992-02-05க்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு கடித மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி:
யாழ் மாவட்டச் செயலகம்,
விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி
அடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

அல்லது

தலைமைச் செயலகம்,
விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி
திருநெல்வேலி.

(B/3608)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(NEW COLLEGE OF HIGH STUDIES)

G.C.E. O/L

ஆண்டு 9, 10

(வகுப்புக்கள்: ஆரம்பம் 11-12-1991) 9 மணி

விஞ்ஞானம்	-	இரா. செல்வவடிவேல்
கணிதம்	-	கதிர்
வர்த்தகம்	-	இந்திரன்
தமிழ்	-	ரவி
சமூகக்கல்வி	-	ராஜன்
ஆங்கிலம்	-	கிரி

(B/3609)

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

லெப். கேணல் மதி

[சுப்பிரமணியம் பாலச்சந்திரன்]

செல்வபவனம் மல்லாகம்

தாயின்மடியில்
28-12-1960

தமிழீழ மண்ணில்
10-12-1988

இரத்தம் சிந்தி இன்னுயிர் காக்கும்
இந்நறுங்கனி இப்போதில்லை
மரத்த இதய மானுடர் வாழ்வில்
மாபெரும் திலகம் காட்டிய சுடர் நீ
தரத்தினில் தமிழர் தன்னலம் விரும்பாத்
தாயகம் போற்றும் தானைப் புகழாளர்
நிச்சயம் உங்கள் இலட்சியம் வெல்லும்!

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(B/3612)

நினைவு கூருகின்றோம்...

1991 - 12 - 10

லெப். கேணல் மதி

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், பேசாலைப்பகுதியில் வீரச்சாவெய்திய

சுமித்திரன் / விக்ரர் (மன்னார்)

1985 ஆம் ஆண்டு கிளிநொச்சி [illegible] பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

புள்ளி | ஜெயராம் (சந்திரசாமி மோகனசந்திரன் - 27, மோகனதாசன் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு கனகம்புளியடிச் சந்தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய

கீதன் (வே. திருக்கேதீஸ்வரன் - மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி)

வின்சன் (செல்வநாதன் மகிந்தன் - சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

1988 ஆம் ஆண்டு திருநெல்வேலி மணல்தறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய யாழ். மாவட்டப் பொறுப்பாளர்

லெப். கேணல் மதி (சுப்பிரமணியம் பாலச்சந்திரன் - மல்லாகம்)

திருக்கோணமலை, மட்டப்புக்கழி பகுதியில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு மன்னார், தலைமன்னார்ப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பெண்குழந்தை.

1990 ஆம் ஆண்டு அம்பாறை பக்கியெல்ல கிராமத்திலிருந்து புறப்பட்ட சிறிலங்கா ஊர்காவல் படையினரால் மட்டக்களப்பு மாலையடிவெட்டைப் பகுதியில் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்ட பக்கியெல்ல, 35 ஆம் கிராமம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 2 தமிழ் இளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்:

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3606)

❁ சிந்தனைக்கு ❁

அனுபவத்தை விவேகத்துடன் பயன்படுத்திக் கொண்டால், எதுவுமே வீணானதல்ல

— ரெனேரெசதேஷ்

ஈழநாதம்

மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 10-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

உடைமையாளர் கவனம்; திருடனுக்கு ஆதங்கம்

'வடக்கே முதலில் பெருமளவு சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள். ஆனால் இத்தகைய நிலை இன்று இடையாது அதே நேரம் தெற்கே இப்பொழுதும் பெருமளவு தமிழர்கள் வாழ்கின்றார்கள்' இவ்வாறு வவுனியாவில் கடந்த சனிக்கிழமை நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டதுபோல் பெருமளவு சிங்கள மக்கள் எப்பொழுதும் வடக்கில் வாழவில்லை. மிகச்சிறு எண்ணிக்கையினரான சிங்கள வியாபாரிகளே வடக்கில் ஆங்காங்கே அரிதாக இருந்தனர். அவர்களே தற்பொழுது வடக்கில் இல்லை.

வடக்கில் என்பதின் ஆரம்பத்தில் இருந்ததுபோன்றே கிழக்கில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிங்கள மக்கள் அரிதாக இருந்தனர். ஆனால் இந்த நூற்றாண்டின் மத்தியில் சிங்கள பேரினவாத சக்திகள் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்களுடன் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களையும் சேர்த்தது. இதனால் தமிழர் தமது தாயகத்தை இழக்க வேண்டி ஏற்பட்டது. இன்று கிழக்கு தமிழர் தாயகமா எனச் சந்தேகிக்கும் அளவிற்கு சிங்களவர் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளது.

இது வடக்கிற்கு கிழக்குத்தந்த பாடமாகும். ஆனால் இன்று தெற்கு ஆதங்கப்படுவதற்குக் காரணம் கிழக்கை ஆக்கிரமித்துக் கொண்டதுபோல் வடக்கை ஆக்கிரமிக்க முடியாமல் புலிகள் தடையாக உள்ளனர் என்பதேயாகும்.

அதேவேளை தெற்கில் தமிழர் இப்பொழுது மட்டும் அங்கு சென்று வாழவில்லை இனப்பிரச்சினை கூர்மை அடைவதற்கு முன்னரிலிருந்தே பல தசாப்தங்களாக வாழ்ந்து வருகின்றார்கள், அதன்தொடர்பாகவே இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதேவேளை தமிழர்கள் எப்பொழுதும் தெற்கில் ஆக்கிரமிப்பாளர்களாக இருக்கவில்லை. சிங்கள மக்களின் உரிமைகளை அபகரிக்கவில்லை. அவர்களது நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை; உரிமை கோரவும் இல்லை ......

அத்தோடு சிங்கள பேரினவாதம் விரும்பிய போதெல்லாம் அங்கிருந்து தமிழர் விரட்டப்பட்டார்கள்; அழிக்கப்பட்டார்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அதற்குச் சான்றாகவே

பனைத் தொழில் மூலம் பொருளாதார விருத்தி

யாழ். மாவட்டத்தில் 42,000 ஏக்கர் நிலப்பரப்பில் 77 லட்சம் பனை மரங்கள் உள்ளதென 1961ஆம் ஆண்டுக் கணக்கீட்டின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பல்வேறு அழிவுகளின் பின் 70 இலட்சம் மரங்களே [illegible]இருக்கும் எனக் கருதப்படுகிறது. இத்தொகையில் 1 வீதம் பனை மரங்களே சாற்றுத் தொழிலின் போது பயன்படுத்தப்படுகின்றன. இவ்வீதமானது அதிகரிக்கப்படும் பட்சத்தில் எமது சுய பொருளாதாரம் விருத்தியடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பனைத் தொழிலானது மிகவும் சிரமமான ஓர் தொழில் முறையாகும். இத்தொழிலானது, மூடக் கொள்கையின் அடிப்படையில் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வந்தன. இதன் காரணமாக பரம்பரை ரீதியாக செய்யப்பட்டு வந்த இத்தொழிலானது இன்று அருகி வருகின்றது. மேலும் இத்தொழில் முறையில் இதுவரை பயிற்சித் திட்டங்களோ அல்லது தொழில்நுட்ப உத்திகளோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இந்தியாவில் இத்தொழில் பல்வேறு தொழில்நுட்ப பயிற்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டும் அங்கு கூட சாதக உற்பத்தித் தாக்கத்தினை ஏற்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் பனையேறும் இயந்திரமொன்றை உருவாக்கி மக்களுக்கு விநியோகிப்பதன் மூலமே இத்தொழிலை முன்னேற்ற இயலும், அதேவேளை தமிழீழப் பொருளாதாரத்தை கணிசமான அளவு விருத்தி செய்ய முடியும் என்ற அடிப்படையில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும் தற்போதைய போர்க்கால சூழ்நிலைகளால் இயந்திர உருவாக்கம் தாமதமடைந்துள்ளது. எனவே பயிற்சித் திட்டமொன்றினூடாக பனைத் தொழில் வல்லுனர்களை உருவாக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

பனைத் தொழில் திட்டமிட்டு செயற்படுவதன் மூலம் வேலையின்றி அல்லலுறும் ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் அதேவேளை எமது பிரதேசமக்களின் சீனித்தேவையையும் பூர்த்தி செய்யலாம்.

யாழ். மாவட்டத்தில் வாழும் 10லட்சம் மக்களின் வருடாந்த சீனி நுகர்வு 24,000 மெற்றிக் தொன் ஆகும். 6 கிலோ கிராம் சீனியை 100 லீற்றர் பதநீரில் இருந்து உற்பத்தி செய்யலாம். ஆகவே, 24 000 மெற்றிக் தொன் சீனியைப் பெற 400000000 லீற்றர் பதநீரைப் பெற 2070000 பனை மரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆகவே எமது பிரதேசத்தில் உள்ள 1/3 பங்கு பனைமரங்களை முழுமையாகப் பயன்படுத்தும் பட்சத்தில் எமது சீனித்தேவையை முற்றாக பூர்த்தி செய்யலாம்.

மேலும் இப்பனைத்தொழிலானது மிகவும் வருமானமிக்க ஒரு தொழிலாக இன்று மாற்றமடைந்துள்ளது. ஒரு பனையில் இருந்து சராசரியாக 3 லீற்றர் பதனீர் உற்பத்தி செய்யப்படுகின்றது. சாதாரண தொழிலாளி ஒருவரினால் ஒரு நாளைக்கு 10 பனைகளில் தொழில் செய்ய முடிகின்றது. ஆகவே 1 லீற்றர் பதனீர் 9ரூபா வீதம் நாளாந்தம் 270 ரூபாவை வருமானமாகப் பெற முடிகின்றது. ஆண்பனை, பெண்பனை இரண்டையும் திட்டமிட்டு பயன்படுத்துவதன் மூலம் 9 மாதங்களுக்கு பனைத் தொழில் செய்ய முடியும். ஆகவே வருடாந்த மொத்த வருமானமாக ஓர் தொழிலாளி 72,900 ரூபாவைப் பெறமுடிகின்றது ஆனால் பனைமரக் கத்திகள் சுண்ணாம்பு உபகரணங்களுக்காக 2000 ரூபாவை செலவழிப்பதனால் நிகர வருமானமாக 70,900 ரூபாவை பெறமுடியும். ஆகவே மாதாந்த வருமானம் 5900 ரூபாவைப்பெற முடிகின்றது. இன்று எமது பிரதேசத்திலுள்ள சூழ்நிலையில் இது ஓர் மிகச்சிறந்த வருமானமாகும். ஆகவே வேலையின்றி அல்லலுறும் எமது இளைஞர்கள்பனைத்தொழில் செய்வதன் மூலம் சிறந்த வருமானத்தையும் அதேவேளை தமிழீழப் பொருளாதாரத்தையும் விருத்திசெய்ய இயலும் என்ற மனப்பான்மையுடன் முன்வரவேண்டும். சமூக ஒடுக்குமுறைகளைக் களைந்து சாதிய அமைப்புக்களைத் தகர்த்து தன்னம்பிக்கை மிக்க சுய பொருளாதாரத்தை கட்டி எழுப்ப பனைத்தொழிலை விருத்தி செய்வோம்.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்

போராளிகள் நடவடிக்கைக்கு

அ. தி. மு. க., காங்கிரஸ் மீதும் குற்றம் சுமத்த முடியும்

--ஆலடி அருணா

(சென்னை)

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் கிரிமினல் நடவடிக்கைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் கூட உதவி அளித்து வந்துள்ளன என்று குற்றஞ் சுமத்த முடியுமென தி. மு. க. பேச்சாளரான ஆலடி அருணா கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஆலடி அருணா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த மகேஸ்வரன், விக்கினேஸ்வரராஜா ஆகிய இருவருக்கும் மூன்று வாரங்கள் பிணை வழங்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு பிணைப் பண

யப்படவேயில்லை இந்த வழக்கில் இவ்விருவரும் கைதுசெய்யப்படமாட்டாரா?

1984 ஆம் ஆண்டு இடம்பெற்ற சென்னை விமான நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 34 இந்தியர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அருணா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போது அப்போதைய முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் ஒப்பந்தத்தை ஆதரித்தபோதும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்தியப் படையின் நடவடிக்கைகளை ஆதரிக்கவில்லை.

இரு சபைகளிலும் அங்கம் வகித்த அ. தி. மு. க. எம்பிக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்திய அமைதிப் படை நடவடிக்கைகளைக் கண்டித்ததோடு இந்திய

மேலும் தி. மு. க. தலைவர் கருணாநிதி விடுதலைப் புலிகளுடனோ அல்லது மற்றைய குழுக்களுடனோ பேசியபோது செல்வி ஜெயலலிதா மத்திய அரசாங்கத்துக்குத் தெரியாமல் தானாகவே விடுதலைப் புலிகளுடன் பேசினார்.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் செல்வி ஜெயலலிதா இதை குறித்துத் தெரிவித்திருந்தார். இவ்வாறாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஜெயலலிதாவிற்கு அதிகாரம் அளித்தவர்கள் யார் என்றும் ஆலடி அருணா கேள்வி எழுப்பியுள்ளார்.

சமாசப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். [illegible] வீதி மெதடிஸ்த மிஷன் [illegible] சமாசத் தலைவர் திரு. ச. முருகநேசன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சகல அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமூகம் தருமாறு உதவி மாவட்ட செயலாளர் திரு. வ. விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார் (24)

தாபரிப்பு நிதி இன்று வழங்கப்படும்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் வன்செயலின் போது தந்தையை இழந்த சிறார்களுக்கு தாபரிப்பு நிதி வழங்கல் 33. [illegible]த் துறை வீதியில் உள்ள

யாது அதே நேரம் தெற்கே இப்பொழுதும் பெருமளவு தமிழர்கள் வாழ்கின்றார்கள்' இவ்வாறு வவுனியாவில் கடந்த சனிக்கிழமை நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா குறிப்பிட்டதுபோல் பெருமளவு சிங்கள மக்கள் எப்பொழுதும் வடக்கில் வாழவில்லை. மிகச்சிறு எண்ணிக்கையினரான சிங்கள வியாபாரிகளே வடக்கில் ஆங்காங்கே அரிதாக இருந்தனர். அவர்களே தற்பொழுது வடக்கில் இல்லை.

வடக்கில் எண்பதின் ஆரம்பத்தில் இருந்ததுபோன்றே கிழக்கில் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சிங்கள மக்கள் அரிதாக இருந்தனர். ஆனால் இந்த நூற்றாண்டின் மத்தியில் சிங்கள பேரினவாத சக்திகள் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்களுடன் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களையும் சேர்த்தது. இதனால் தமிழர் தமது தாயகத்தை இழக்க வேண்டி ஏற்பட்டது. இன்று கிழக்கு தமிழர் தாயகமா எனச் சந்தேகிக்கும் அளவிற்கு சிங்களவர் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளது.

இது வடக்கிற்கு கிழக்குத்தந்த பாடமாகும். ஆனால் இன்று தெற்கு ஆதங்கப்படுவதற்குக் காரணம் கிழக்கை ஆக்கிரமித்துக் கொண்டதுபோல் வடக்கை ஆக்கிரமிக்க முடியாமல் புலிகள் தடையாக உள்ளனர் என்பதேயாகும்.

அதேவேளை தெற்கில் தமிழர் இப்பொழுது மட்டும் அங்கு சென்று வாழவில்லை இனப்பிரச்சினை கூர்மை அடைவதற்கு முன்னரிலிருந்தே பல தசாப்தங்களாக வாழ்ந்து வருகின்றார்கள், அதன்தொடர்பாகவே இப்பொழுதும் வாழ்ந்து வருகின்றார்கள்.

இதேவேளை தமிழர்கள் எப்பொழுதும் தெற்கில் ஆக்கிரமிப்பாளர்களாக இருக்கவில்லை. சிங்கள மக்களின் உரிமைகளை அபகரிக்கவில்லை. அவர்களது நிலத்தை ஆக்கிரமிக்கவில்லை; உரிமை கோரவும் இல்லை ......

அத்தோடு சிங்கள பேரினவாதம் விரும்பிய போதெல்லாம் அங்கிருந்துதமிழர்விரட்டப்பட்டார்கள்; அழிக்கப்பட்டார்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அதற்குச் சான்றாகவே 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட இனக் கலவரங்களும் உள்ளன.

ஆனால் கிழக்கில் நிலவரம் தலைகீழாகவே இருந்தது ஆக்கிரமிப்பாளர்களால் தமிழர்கள் தமது தாயக மண்ணில் இருந்து விரட்டப்பட்டனர். இதற்கு ஆக்கிரமிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் அதற்கு உடந்தையாக இருந்த சிறிலங்கா இராணுவமுமே காரணமாகும்.

இலங்கையில் தமிழர்கள் சிறுபான்மையினர் மொத்தச் சனத்தொகையில் சுமார் 12.5 சதவிதத்தினரே தமிழர்கள் ஆவார்கள். அவர்கள் இலங்கையின் எப்பகுதியில் சென்று குடியேறினாலும் அப்பகுதியில் பெரும்பான்மையினராகிவிட முடியாது ஆனால் சிங்களவரின் நிலை அவ்வாறில்லை. அவர்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் சுமார் 74 வீதத்தினர் எங்கு சென்று குடியேறினராகிலும் பெரும்பான்மையினர் ஆகிவிட முடியும். இதற்கு எமது கண்முன் உள்ள உதாரணம் கிழக்காகும்;

இந்த நிலையில் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தை பௌத்த சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பாளருக்கு வழங்கவில்லை என்பதே சிறிலங்கா ஜனாதிபதிக்கு தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆதங்கமாகும். திரு பிரேமதாசாவின் இந்த ஆதங்கம் ஒரு பொருளின் உடைமையாளன் தனது முன்னைய அனுபவத்தைக் கொண்டு தற்பொழுது மீதமுள்ள தனது உடைமைகளை பாதுகாக்க எடுத்த முயற்சிகளைக் கண்டு திருடன் ஒருவன் உடைமையாளன் மீது ஆத்திரப்படுவதற்கு ஒப்பானதாகும்.

றது. மேலும் இத்தொழில் முறையில் இதுவரை பயிற்சித் திட்டங்களோ அல்லது தொழில்நுட்ப உத்திகளோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இந்தியாவில் இத

செயற்படுவதன் மூலம் வேலையின்றி அல்லலுறும் ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் அதேவேளை எமது பிரதேசமக்களின் தேவையையும் பூர்த்தி செய்யலாம்.

முடிகின்றது. ஆகவே 1 லீற்றர் பதனீர் 9 ரூபா வீதம் நாளாந்தம் 270 ரூபாவை வருமானமாகப் பெற முடிகின்றது. ஆண் பனை, பெண்பனை இரண்டையும் திட்டமிட்டு பயன்படுத்துவதன் மூலம் 9

பிக்கை மிக்க ஒரு பொருளாதாரத்தை கட்டி எழுப்ப பனைத்தொழிலை விருத்தி செய்வோம்.

-தமிழீழ ஆய்வு நிறுவனம்

போராளிகள் நடவடிக்கைக்கு

அ. தி. மு. க., காங்கிரஸ் மீதும் குற்றம் சுமத்த முடியும்

--ஆலடி அருணா

(சென்னை)

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் கிரிமினல் நடவடிக்கைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரசும் கூட உதவி அளித்து வந்துள்ளன என்று குற்றஞ் சுமத்த முடியுமென தி. மு. க. பேச்சாளரான ஆலடி அருணா கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஆலடி அருணா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த மகேஸ்வரன், விக்கினேஸ்வரராஜா ஆகிய இருவருக்கும் மூன்று வாரங்கள் பிணை வழங்கப்பட்டிருந்தது. இவர்களுக்கு பிணைப் பணமாக 25 000 ரூபாவினை இன்றைய தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியின் நெருங்கிய நண்பரான காங்கிரஸ் தலைவர் சிவிவணன் வழங்கினார். இந்த இரு எதிரிகளும் பிணையில் விடுவிக்கப்பட்ட நேரத்தில் தப்பியோடி விட்டனர். இவர்கள் பின்னர் கைதுசெய்யப்படவேயில்லை இந்தவழக்கில் இவ்விருவரும் கைதுசெய்யப்படமாட்டாரா?

1984 ஆம் ஆண்டு இடம்பெற்ற சென்னை விமான நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 34 இந்தியர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அருணா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்போது அப்போதைய முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் ஒப்பந்தத்தை ஆதரித்தபோதும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்தியப் படையின் நடவடிக்கைகளை அங்கீகரிக்கவில்லை.

இரு சபையிலும் அங்கம் வகித்த அ. தி. மு. க. எம். பிக்கள் விடுதலை புலிகளுக்கு எதிரான இந்திய அமைதிப் படை நடவடிக்கைகளைக் கண்டித்ததோடு இந்திய துருப்புகள் இந்தியாவிற்குத் திரும்ப அழைக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். இவையனைத்தும் இரு சபைகளிலும் பதிவாகியிருக்கின்றன என்றும் ஆலடி அருணா குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர்கள் ராஜீவ்காந்தி, வி. பி சிங் சந்திரசேகர் ஆகியோரின் தூண்டுதல்களின் பேரில் தி. மு. க. தலைவர் கருணாநிதி விடுதலைப் புலிகளுடனோ அல்லது மற்றைய குழுக்களுடனோ பேசியபோது செல்வி ஜெயலலிதா மத்திய அரசாங்கத்துக்குத் தெரியாமல் தானாகவே விடுதலைப் புலிகளுடன் பேசினார்.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் செல்வி ஜெயலலிதா இதை குறித்துத் தெரிவித்திருந்தார். இவ்வாறாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஜெயலலிதாவிற்கு அதிகாரம் அளித்தவர்கள் யார் என்றும் ஆலடி அருணா கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் ஈ பி ஆர். எல் எப். தலைவர் பத்மநாபா சென்னையில் கொலை செய்யப்பட்ட பின்னர் இலங்கைத் தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் தி மு கவும், சிங்கும் கவனிக்கவில்லை என்று கூட ஜெயலலிதா குறிப்பிட்டார் என்று ஆலடி அருணா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சமாசப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். [illegible] மெதடிஸ்த மிஷன் ஆரம்ப நிலையில் சமாசத் தலைவர் திரு. ச. முருகநேசன் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சகல அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமூகம் தருமாறு உதவி மாவட்ட செயலாளர் திரு. வ. விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார் (24)

தாபரிப்பு நிதி இன்று வழங்கப்படும்

(கொழும்புத்துறை)

யாழ் மருதனார்மடம் சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் வன்செயலின் போது தந்தையை இழந்த சிறார்களுக்கு தாபரிப்பு நிதி வழங்கல் 33, பருத்தித்துறை வீதியில் உள்ள சமாசப் பணிமனையில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சமாசத்தலைவர் திரு. செ. இராசராசா தலைமையில் நடைபெறும்.

இப்பணத்தைப் பெறுபவர்களின் பாதுகாவலர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

இந்திய காவல்துறை

நவீனப்படுத்த 40கோடி ரூபா; தமிழகத்திற்கு 10 கோடி

இந்திய காவல் துறையை நவீனமயப்படுத்த இந்த ஆண்டு நாற்பது கோடி ரூபாவினை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாகவும் இதில் பத்து கோடிரூபாவை தமிழக காவல் துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் குமாரமங்கலம் தெரிவித்திருக்கிறார்.

சேலத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய அவர் தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் குற்றங்களை கண்டு பிடிப்பதற்காக தமிழக சிறப்புப் புலனாய்வு குழு ஒன்றை நியமித்ததற்கும் தமிழக காவல்துறையினரின் செயற்பாட்டிற்கும் அவர் பாராட்டுத் தெரிவித்த போதே இதனை அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழகத்தின் அண்மைய வெள்ளப் பெருக்கு நிவாரணத்திற்கு என மத்திய அரசு இந்த ஆண்டுக்கு 30 கோடிரூபாவை அனுமதித்துள்ளது என்றும் தேவையானால் அடுத்த ஆண்டிற்கான நிதியையும் இந்த ஆண்டிலேயே பெறலாம் என்றும் குமாரமங்கலம் தெரிவித்தார்.

ஜெயலலிதா இராஜினாமா செய்ய வேண்டும்

ஜி. எம். வல்லரசு

(சென்னை)

பயங்கரவாத தடைச்சட்டத்தை தவறாகப்பயன்படுத்தியதாக முதல்வர் ஜெயலலிதா தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று அகில இந்திய பார்வேர்ட் புளக்கட்சியைச்சேர்ந்த ஜி. எம். வல்லரசு கோரிக்கை விடுத்துள்ளார். சென்னையில் விடுத்த அறிக்கையில் மேலும் அவர் அரசியல் எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதிகாரசபையாக மாற்றம்

ரயில்வே திணைக்களம் ஒரு அதிகார சபையாக மாற்றப்படும் என்று அமைச்சர் விஜயபாலமெண்டிஸ் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களம் தொடர்ந்து பல வருடங்களாக நஷ்டத்தில் இயங்குகிறது. இந்த வருடமும் திறைசேரியிடம் உதவி கோர முடியாது எனவேதான் ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக்க தீர்மானித்தோம் என்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசா. ஆதரவான பிரசாரத்தில் வானொலியும் தொலைக்காட்சியும்

- சிறிமாவோ கண்டனம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமும், ரூபவாஹினியும் காலை முதல் மாலை வரை அரசாங்கத்திற்கு சார்பான பிரசாரங்களையே செய்து வருகின்றன என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ் சாட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற உள்நாட்டலுவல்கள், தகவல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஒழிக்க "லேக் ஹவுஸ்" தீவிர முயற்சியை மேற்கொண்டுள்ளது என்றும், ஆனால் அந்த முயற்சியில் லேக் ஹவுஸ் வெற்றியடையப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1951 இல் ஐ.தே.க. வைவிட்டு விலகியதில் இருந்து லேக் ஹவுஸ் எமது கட்சியை ஒழிக்க பாடுபட்டுக் கொண்டே இருந்தது. ஆனால் 1956 இல் பண்டாரநாயக்கா அமோக வெற்றி பெற்றார். என்றும்.

ஐ.தே.க. இப்போது லேக் ஹவுஸை தனது பிரசாரத்திற்குப் பயன்படுத்துகின்றது. அரசாங்க விளம்பரங்களை பொறுத்தவரை இந்த நிறுவனமே முழுமையான ஆதிக்கம் செலுத்துகின்றது என்றும்.

இவ்வாறாகவே ரூபவாஹினியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் செயற்படுகின்றது என்றும் சிறிமாவோ குற்றஞ் சாட்டினார்.

தந்தையின் கட்சியில் இணைந்து பணியாற்றுங்கள்

- சிறிமாவோ

(கொழும்பு)

தந்தையின் கட்சியில் ஒன்றிணைந்து மக்களுக்கு பணியாற்றுங்கள் என்று அநுராவையும், சந்திரிகாவையும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டுள்ளார்.

அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சகல அமைப்பாளர்களையும் வரும் 20 ஆம் திகதி அழைத்து தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் டடா சட்டம்; உரிமையைப் பறிக்கிறது

- நல்லசிவன்

(சென்னை)

தமிழகத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள 'டடா'ச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாக அமைகின்றது என்று மாக்சிய கம்யூனிசக் கட்சியின் தமிழக பிரிவின் செயலாளர் நல்லசிவன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை தஞ்சாவூரில் நடைபெற்ற இக்கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டதாகவும் நல்லசிவன் தெரிவித்தார்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக அமையும் இச்சட்டத்தை நிறுத்தி வைக்கும்படி மாநில, மத்திய அரசுகளைத் தமது கட்சி கேட்டுள்ளதாகவும் நல்லசிவன் கூறினார்.

யூத இயக்கம் இனவெறி பிடித்தது

(டாக்கா)

யூதர் இயக்கத்தை இனவெறி பிடித்தது என்றுகூறும் தீர்மானம் ஒன்றை இஸ்லாமிய வெளியுறவு அமைச்சர்கள் அங்கீகரித்துள்ளனர்.

செனிகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைப்புக் கூட்டமொன்றில் இதனை அவர்கள் அங்கீகரித்தனர். இந்த மாநாட்டில் 45 இஸ்லாமியநாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

இந்தத் தீர்மானம் சிரியாவால் கொண்டு வரப்பட்டு பின்னர் கலந்து கொண்ட அனைத்து இஸ்லாமிய நாடுகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜனவரியில் றொனி டி மெல் கொழும்பு திரும்பவுள்ளார்?

(கொழும்பு)

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசில் நிதியமைச்சராக இருந்த றொனி. டி. மெல் ஐக்கிய ஜனநாயகதேசிய முன்னணியில் சேரவுள்ளார். இதற்காக இவர் லண்டனிலிருந்து அண்மையில் கொழும்பு வர இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மனைவி மல்லிகா டி. மெல் ஏற்கனவே ஜனநாயக தேசிய முன்னணியில் உபதலைவராக இருந்து வருகிறார்.

ஜனவரி மாதம் முதற்பகுதியில் றொனி. டி. மெல் கொழும்பு வந்தடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற பொதுத்தேர்தலின் பின் டி. மெல் தானாகவே சிறிலங்காவை விட்டு வெளியேறி லண்டனில் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகள் அதிரடி

★ ரி.56-1 ரக துப்பாக்கிகள் - 03
★ ரி.56-2 ரகதுப்பாக்கி - 01
★ ஐ எம். ரக ரவைகள் - 214
★ ஏ. கே. மகசின் - 14
★ ஏ. கே. கோல்சர் - 03
★ ஹெல்மெற் - 01
★ சப்பாத்துக்கள் 02 சோடி

ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகளின்

நடாத்தினார்கள் என்றும்.

அவர்களிடமிருந்து புலிகளின் ஆயுத விநியோகம் ஆயுதங்களைக் கொண்டுசெல்லும் வழிமுறைகளைப் பற்றி அவர்கள் அறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவிலிருந்து கடந்த

தமிழ் நாட்டு

பினர் அறிவித்துள்ளனர்.

மேலும் விடுதலைப்புலிகளின் கப்பல் போக்குவரத்திற்கு வசதியான தமிழ்நாட்டின் கடலோரப்பகுதிகளைத் தேர்ந்து எடுப்பதற்கும் தமக்கு விடுதலைப்புலிகள்பணிப்புரை விடுத்ததாகவும் மேற்படி நபர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம்

அரச அதிபர் கொழும்புசென்றிருந்தார். அரச அதிபர் எடுத்துச்சென்ற கடிதத்தைப்பெற்றதும் திரு. தொண்டமான் மிகுந்த மகிழ்ச்சியடைந்ததாகவும் ஆர்வத்துடன் கடிதத்தைப் படித்ததாகவும், விரைவில் கடிதத்திற்கான பதிலை அனுப்புவதாகக் கூறியதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

திரு. தொண்டமானுடன்

தொண்டமானின்

வடக்கு-கிழக்குப் பகுதியில் சமாதானத்தையும் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கு திடசங்கற்பம் கொண்டுள்ள சகல கட்சிகளும் இது குறித்து மனப்பூர்வமாக பரிசீலிக்க வேண்டும். அத்துடன் இந்த முயற்சியில் பங்கு கொள்ளவும் வேண்டும்.

வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் குழுநிலையில் பாராளுமன்றத்தில் ஆராயப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஹரல்ட் ஹேரத் இந்த விபரங்களை வெளியிட்டார்.

புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றி அமைச்சர் தொண்டமான் தெரிவித்த கருத்துத் தொடர்பாக லக்ஷ்மன்ஜெயக்கொடி கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வொன்றைக் காண்பதற்கு காலம்

பட்டதாரி

களுக்கு 2000 ரூபா சம்பளமும் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதப்படி இரண்டாவது சம்பள உயர்ச்சி 250 ரூபாவும், இரண்டாவது வருடம் முடிவதற்குள் சேவையும் நிரந்தரமாக்கப்படும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இவர்களுக்கு சம்பள உயர்வைத் தவிர வேறு எதுவும் வழங்கப்படவில்லை. [illegible] 300 ரூபா அலவன்சும் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை அண்மையில் கல்வி, உயர்கல்வி அமைச்சினால் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குமாறு கல்வித் திணைக்களங்களுக்கு சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்குமாகாண அமைச்சினால் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களையோ அல்லது மத்திய அமைச்சு நியமித்த பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களையோ நிரந்தரமாக்குவது என்பது தெளிவாக இல்லை என்றும்

நினைவு கூருகின்றோம்

மாங்குள இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த

கப்டன் டோறா (கந்தப்பு பத்மாவதி)

தாயின் மடியில் 13-12-1963
தாயக மண்ணில் 22-11-1990

டோறா
நீ
மாங்குளத்தில்
கொடி பறக்கவிட
கொடியவர் தன்னுடன்
போர் தொடுத்தாய்
உன் ஆசை நிறைவேறி
மாங்குளத்தில் இப்போ புலிக்கொடி....
டோறா பத்மாவதி
உன்னை
நீல மேகமெல்லாம்
நின்று பார்த்து
அழுகின்றன.
உன் உடலைக் கண்டு
ஆண்டு ஒன்றுதான்
ஆனால்
உன் உயிர் நினைவு
என்றும் எம் மனதில்....

சசி இல்லம்,
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(B/ 3611)

நினைவு கூருகின்றோம்

வெற்றியடையப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

எல். டபிள்யூ. ஆர். டி.

திரக் கட்சியின் சகல அமைப்பாளர்களையும் வரும் 20 ஆம் திகதி அழைத்து தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தவுள்

தமிழகத்தில் டடா சட்டம்; உரிமையைப் பறிக்கிறது

- நல்லசிவன்

(சென்னை)

தமிழகத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள 'டடா'ச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாக அமைகின்றது என்று மாக்சிய கம்யூனிசக் கட்சியின் தமிழக பிரிவின் செயலாளர் நல்லசிவன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை தஞ்சாவூரில் நடைபெற்ற இக்கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டதாகவும் நல்லசிவன் தெரிவித்தார்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக அமையும் இச்சட்டத்தை நிறுத்தி வைக்கும்படி மாநில, மத்திய அரசுகளைத் தமது கட்சிகேட்டுள்ளதாகவும் நல்லசிவன் கூறினார்.

புலிகள் அதிரடி

★ ரி.56-1 ரக துப்பாக்கிகள் - 03
★ ரி.56-2 ரகதுப்பாக்கி - 01
★ ஐ எம் ரக ரவைகள் - 214
★ ஏ. கே. மகசின் - 14
★ ஏ. கே. கோல்சர் - 03
★ கெல்மெற் - 01
★ சப்பாத்துக்கள் 02 சோடி

ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

புலிகளின்

நடாத்தினார்கள் என்றும், அவர்களிடமிருந்து புலிகளின் ஆயுத விநியோகம் ஆயுதங்களைக் கொண்டுசெல்லும் வழிமுறைகளைப் பற்றி அவர்கள் அறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவிலிருந்து கடந்த புதன்கிழமை இந்தக்குழுவினர் சென்னைக்கு சென்றனர்.

மிகுதி

ருபபில் உண்டு. மிகுதி வினாத்தாள்கள் எடுத்து வரப்பட்டதும் இரண்டாம் கட்ட பரீட்சை வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று யாழ். கல்வித் திணைக்களம் அறிவித்திருக்கிறது. (க)

வடமராட்சி

மக்கள் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து இப்புகழுடல்கள் பாண்ட் இசையுடனும், இராணுவ அணிவகுப்பு மரியாதையுடனும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வடமராட்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

மேஜர் இளங்கோ யாழ். கோட்டை, பலாலி, சிலாவத்துறை, ஆனையிறவு சுற்றுவளைப்பு, பரப்புக்கடந்தான் ஆகிய முக்கியபல தாக்குதல்களில் முன்னின்று போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டு

யினர் அறிவித்துள்ளனர்.

மேலும் விடுதலைப்புலிகளின் கப்பல் போக்குவரத்திற்கு வசதியான தமிழ்நாட்டின் கடலோரப்பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் தமக்கு விடுதலைப்புலிகள்பணிப்புரை விடுத்ததாகவும் மேற்படி நபர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம்

அரச அதிபர் கொழும்புசென்றிருந்தார். அரச அதிபர் எடுத்துச்சென்ற கடிதத்தைப்பெற்றதும் திரு. தொண்டமான் மிகுந்த மகிழ்ச்சியடைந்ததாகவும் ஆர்வத்துடன் கடிதத்தைப் படித்ததாகவும், விரைவில் கடிதத்திற்கான பதிலை அனுப்புவதாகக் கூறியதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

திரு. தொண்டமானுடன் குறுகிய நேரம் உரையாடிய போதிலும் அவர் மிகவிரைவில் யாழ்ப்பாணம் வருவதற்கு மிகுந்த ரசனையுடனும், ஆர்வத்துடனும் இருப்பதைத் தன்னால் உணர முடிந்ததாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (க)

பரீட்சை

ளர் மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கு முன்கூட்டியே இராணுவ அதிகாரிகளிடம் அனுமதியை நாம் பெற்றிருந்த போதும் இராணுவத்தினர் திட்டமிட்டு இந்த விஷமத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்தார். இத்தாக்குதல் நடைபெற்றபோது மண்டபத்தினுள் இருநூற்றிப்பதினாறு பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து மீண்டும் காலை பத்து மணிக்கு அப்பகுதிக்கு வந்த விமானங்கள் வீசிய மூன்று குண்டுகளினால் மரிய கொறட்டிஸ் தேவாலயம் சேதமடைந்தது.

(கொழும்பு)

ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசில் நிதியமைச்சராக இருந்த றொனி. டி. மெல் ஐக்கிய ஜனநாயக தேசிய முன்னணியில் சேரவுள்ளார். இதற்காக இவர் லண்டனிலிருந்து அண்மையில் கொழும்பு வர இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது மனைவி மல்லிகா டி. மெல் ஏற்கனவே ஜனநாயக தேசிய முன்னணியில் உபதலைவராக இருந்து வருகிறார்.

ஜனவரி மாதம் முதற்பகுதியில் றொனி. டி. மெல் கொழும்பு வந்தடைவார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. சென்ற பொதுத்தேர்தலின் பின் டி. மெல் தானாகவே சிறிலங்காவை விட்டு வெளியேறி லண்டனில் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொண்டமானின்

வடக்கு-கிழக்குப் பகுதியில் சமாதானத்தையும் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கு திட்டங்களைக் கொண்டுள்ள சகல கட்சிகளும் இது குறித்து மனப்பூர்வமாக பரிசீலிக்க வேண்டும். அத்துடன் இந்த முயற்சியில் பங்கு கொள்ளவும் வேண்டும்.

வெளிவிவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் குழுநிலையில் பாராளுமன்றத்தில் ஆராயப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ஹரல்ட் ஹேரத் இந்த விபரங்களை வெளியிட்டார்.

புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றி அமைச்சர் தொண்டமான் தெரிவித்த கருத்துத் தொடர்பாக லக்ஷ்மன்ஜெயக்கொடி கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் அனைவரும் பாடுபட வேண்டும்' என்பதில் சபையிலுள்ள சகல அரசியல் கட்சிகள் மத்தியிலும் பெரும்பாலான மக்கள் மத்தியிலும் ஒத்திசைவான கருத்து நிலவுவதாகஅமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வொன்றைக் காணும் முயற்சியில் சர்வகட்சி மாநாடும், பாராளுமன்ற தெரிவுக்குழுவும் திடசங்கற்பம் கொண்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஆர்வம் கொண்டுள்ள அனைத்துக் கட்சிகளும் பாராளுமன்ற தேர்வுக் குழுவினதும், சர்வ கட்சி மாநாட்டின் பரிசீலனைக்காக தமது கருத்துக்கள், யோசனைகள் ஆகியவற்றைத் தெரிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்தியாவுடனான சிறிலங்காவின் நெருங்கிய நட்புறவு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்] எனவும் தெரிவித்தார்.

கச்சதீவு தொடர்பான ஒப்பந்தம் சட்டப்படியானது என்றும், இந்தியா அவ்வாறு சிறிலங்காவிடம் உறுதியளித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்

மேலும் அவர் பொருளாதார சுபீட்சத்தைப் பெறுவதற்கு தனது வெளிநாட்டுக் கொள்கையை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது என்றும்,

உலகின்பிராந்திய நலனைக் காப்பாற்றும் வகையிலேயே தனது வெளிநாட்டுக் கொள்கையை பின்பற்றுகின்றது என்றும்,

ஏனைய நாடுகளும் இலங்கையைப் போல் தமது வெளியுறவுக் கொள்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய தகவல் ராஜாங்க இணை அமைச்சர் ஏ. கே. ரணசிங்க இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மேலும் விஸ்தரிக்கக் கூடிய விடயங்களை இனங்கண்டு கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்றார்.

இலங்கை அணிசேராக் கொள்கையை பின்பற்றி வருகின்றதென்றும், சகல நாடுகளுடனும் நட்புறவை மேற்கொள்வதற்கு அரசாங்கம் விரும்புகின்றது என்றும் ரணசிங்க தெரிவித்தார்.

பட்டதாரி

களுக்கு 2000 ரூபா சம்பளமும் வழங்கப்படுகிறது. இவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதப்படி இரண்டாவது சம்பள உயர்ச்சி 250 ரூபாவும், இரண்டாவது வருடம் முடிவதற்குள் சேவையும் நிரந்தரமாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு சம்பள உயர்வைத் தவிர வேறு எதுவும் வழங்கப்படவில்லை. நவம்பரில் 300 ரூபா அலவன்சும் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை அண்மையில் கல்வி, உயர்கல்வி அமைச்சினால் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களை நிரந்தமாக்குமாறு கல்வித் திணைக்களங்களுக்கு சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்குமாகாண அமைச்சினால் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களையோஅல்லது மத்திய அமைச்சு நியமித்த பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களையோ நிரந்தரமாக்குவது என்பது தெளிவாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

தாயின் மடியில் 13-12-1963
தாயக மண்ணில் 22-11-1990

டோறா
நீ
மாங்குளத்தில்
கொடி பறக்கவிட
கொடியவர் தன்னுடன்
போர் தொடுத்தாய்
உன் ஆசை நிறைவேறி
மாங்குளத்தில் இப்போ புலிக்கொடி.....
டோறா மதியாவதி
உன்னை
நீல மேகமெல்லாம்
நின்று பார்த்து
அழுகின்றன.
உன் உடலைக் கண்டு
ஆண்டு ஒன்றுதான்
ஆனால்
உன் உயிர் நினைவு
என்றும் எம் மனதில் ....

சசி இல்லம்,
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(B/ 3611)

நினைவு கூருகின்றோம்

வீரவேங்கை

2 ஆம் லெப். அருள்நங்கை

(மார்க்கண்டேசர் பிறேமலதா)

தாய்க்கென மண்ணில் 19-12-1974
தமிழுக்கென விண்ணில் 05.09.1991

மாங்குளம் முதற்கொண்டு
மணலாறு வரையிலும்
தாயக மீட்பிற்காய் எம்
புலிக்கொடி பிடித்தவளே
புலி மீது புலி மேவும்
புதுயுகம் வரும் ஒருநாள்
அப்போதும் நாம் உனை
மறப்பமோ இல்லை இல்லை
நினைப்பமே நித்தியமே.

ஊறணி,
வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்

(B/ 3613)